பக்கங்கள் 21+3

# மாலை முரசு

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நிச்சயம் நீக்கப்படும்!

### ஜே.வி.பி. திட்டவட்டம்



“வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குரிய 02▶

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 07 செவ்வாய்க்கிழமை 23.09.2025 | அதிர்வு 54

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

ILANKAI TAMIL ARASU KADCHI

HEAD OFFICE

HE Anura Kumara Dissanayake
President of Sri Lanka
Presidential Secretariat
Colombo - 01

Your Excellency,

SOLUTION TO THE TAMIL NATIONAL QUESTION

It was decided to write to you in this regard at our party's recent central working committee meeting.

It is now one year since you took office as the President of the country. In your election manifesto and in several announcements you have promised to resolve this most pressing issue. However, no action seems to have been taken in respect of this matter in last one year.

We are ready to hold discussions with your government with regard to the aforesaid issue as the premier Tamil political party. A committee comprising of the undersigned President, General Secretary and our eight Members of Parliament has been appointed to meet with you in respect of this manner.

Please be kind enough to allocate a time for the above committee to meet with you at your earliest convenience.

Yours truly,

President — General Secretary

# தீர்வு குறித்து ஜனாதிபதியுடன் நேரில் பேச தமிழரசு முயற்சி!

## நேரம் ஒதுக்கித் தரக் கோரிக் கடிதம்

தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை குறித்து நேரடியாகப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கி தாருங்கள் என்று கோரி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் ஒப்பமிட்டு கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்திருக்கின்றார்கள்.

‘தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு’ என்ற தலைப்பில் அமைந்த அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் வருமாறு:- 02▶

# குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 3 ஆண்டுகள் சிறை!




நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு இலத்திரனியல் விசா வழங்கும் விடயம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நிறைவேற்றத் தவறிய குற்றத்துக்காக முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகமான ஹர்ஷா இலுக்பிட்டியாவுக்கு இலங்கை உயர்நீதிமன்றம் இன்று மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

ஆயினும், இந்த வழக்கில் அவர் ஏற்கனவே ஓராண்டு காலம் விளக்கமறியலில் இருந்தமையைக் கருத்தில் கொண்டு, இப்போது முதல் அவர் 02▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# வவுனியாவில் திலீபனுக்கு சிலை வைக்க இடம் தாருங்கள்

## மாநகர மேயரிடம் கடிதம் சமர்ப்பிப்பு

(கி.வசந்தன்)

தியாக தீபம் திலீபனுக்கு வவுனியாவில் சிலை வைப்பதற்கு இடம் தாருங்கள் எனக் கோரிக்கை விடுத்து வவுனியா வர்த்தகரான எஸ்.சிவரூபன் வவுனியா மாநகர மேயரிடம் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், தமிழர்களின் உன்னத இலட்சியத்துக்காகப் பல நாட்களாகப் பசி இருந்து உயிர் நீத்த தியாக தீபம் திலீபன் அண்ணாவுக்கு சிலை வைப்பதற்கு வவுனியாவில் இடம்



ஒன்றை ஒதுக்கித் தாருங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதத்தை ஏற்றுக்கொண்ட வவுனியா மாநகர மேயர் சு. காண்டீபன், திலீபனின் சிலையை வைப்பதற்கு இடம் கோரி தங்களால் தரப்பட்ட கடிதத்தை மாநகர சபை அமர்வில் முன்வைப்பதாகவும், இந்தக் கோரிக்கையை விடுக்கும் தாங்கள் வேறு சில நடைமுறைகளும் இருப்பதன் காரணமாக அதனையும் செயற்படுத்தி தமக்கு அந்த ஆவணங்களையும் பெற்றுத் தருமாறும் தெரிவித்துள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### குடிவரவு...

இரண்டு ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு இலத்திரனியல் விசா வழங்கும் பொறுப்பை மிக உயர்ந்த கட்டணத்துக்கு – அதிகாரப்பூர்வ ஏலங்களை கோராமல் – வி.எவ்.எஸ். என்ற நிறுவனத்திற்கு வழங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசின் முடிவுக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகள் ரவூப் ஹக்கீம், சம்பிக்க ரணவக்க ஆகிய மூவரும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமையோடு அந்த வழக்கின் சார்பில் தாங்களே முன்னிலையாகி நீதிமன்றத்தில் வாதிட்டும் இருந்தனர்.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்த வழக்கை ஒட்டி உயர்நீதிமன்றம் ஓர் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தது.

இலத்திரனியல் விசா வழங்கும் பொறுப்பை வெளி நிறுவனத்துக்கு மிக உயர்ந்த கட்டணத்தில் 'அவுட்சோர்ஸ்' செய்வதற்கான அமைச்சரவையின் முடிவை தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தரவிட்ட நீதிமன்றம், பழைய முறைப்படி – முந்தைய – விரைவான மின்னணு பயண அங்கீகார செயல்முறையை மீண்டும் செயல்படுத்த உத்தரவிட்டது.

ஆனால், உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவை நிறைவேற்றாமல் முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகமான ஹர்ஷா இலுக்பிட்டிய இழுத்தடித்தார் என்று கூறப்படுகின்றது. பழைய முறைமையை மீண்டும் கொண்டுவர மாதக் கணக்கில் காலம் எடுக்கும் என்றார் அவர்.

இந்த நடவடிக்கை நீதிமன்ற அவமதிப்பு என மனுதாரர்கள் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான ரவூப் ஹக்கீம், சம்பிக்க ரணவக்க ஆகிய மூவரும் உயர்நீதிமன்றத்தில் முறையிட்டனர்.

அதனை விசாரித்த உயர்நீதிமன்றம், நீதிமன்றத்தின் உத்தரவை செயல்படுத்தத் தவறியதற்காக ஹர்ஷா இலுக்பிட்டியை கைது செய்து விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டது. அதன்படி கடந்த ஆண்டு செப்டெம்பர் முதல் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் கைதானமையை அடுத்து 24 மணி நேரத்துக்குள் பழைய முறைமையின் கீழ் விசா வழங்கும் முறைமை உடனடியாக நடைமுறைக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

அவருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு விசாரணை நடைபெற்றது. ஆரம்பத்தில் குற்றத்தை ஏற்க ஹர்ஷா இலுக்பிட்டிய மறுத்தார்.

எனினும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மன்றில் சூடு பிடித்தமையை நீதிமன்றத்தின் உத்தரவை புறக்கணித்தமையை ஒப்புக்கொண்டு, ஹர்ஷா இலுக்பிட்டி உயர் நீதிமன்றத்தில் நிபந்தனையின்றி மன்னிப்புக் கேட்டார்.

இந்த நிலையிலேயே அவருக்கு இந்தத் தண்டனைத் தீர்ப்பு இன்று வழங்கப்பட்டது.

### தீர்வு குறித்து...

"நமது கட்சியின் சமீபத்திய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக உங்களுக்கு எழுத முடிவு செய்யப்பட்டது.

நீங்கள் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருடம் ஆகின்றது. உங்கள் தேர்தல் அறிக்கையிலும் மற்றும் பல அறிவிப்புகளிலும் இந்த மிக முக்கியமான பிரச்சினையைத் தீர்ப்பீர்கள் என நீங்கள் உறுதியளித்துள்ளீர்கள். இருப்பினும், கடந்த ஒரு வருடமாக இந்த விஷயத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

முதன்மையான தமிழ் அரசியல் கட்சியாக, மேற்கூறிய பிரச்சினை தொடர்பாக உங்கள் அரசுடன் கலந்துரையாட நாங்கள் தயாராக உள்ளோம். அந்தவகையில் உங்களைச் சந்திக்க கீழே கையொப்பமிடப்பட்ட தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் எங்கள் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட குழு உங்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் நேரத்தில் உங்களைச் சந்திக்க ஒரு நேரத்தை ஒதுக்கித் தருமாறு வேண்டுகின்றோம்." – என்றுள்ளது.

### நிறைவேற்று...

யோசனை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் மற்றும் மனித உரிமை பாதுகாப்பு உட்பட முக்கிய பல விடயங்களை மையப்படுத்தியமாகவே புதிய அரசமைப்புக்குரிய பணி இடம்பெறும். இதனை நாம் நிச்சயம் செய்வோம். இதற்கு எமக்கு கால அவகாசம் அவசியம்."

– இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா அறிவித்தார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். ,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் நிச்சயம் நிறைவேற்றப்படும். ஒவ்வொரு உறுதிமொழிக்கும் நாம் நிச்சயம் பொறுப்புகூறுவோம்.

முதலில் தள்ளாடும் நிலையில் உள்ள பொருளாதாரத்தை ஸ்தீரப்படுத்த வேண்டும். மக்களுக்கு நிவாரணத்தை வழங்க வேண்டும். ஊழல், மோசடிகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இவற்றை செய்யாமல் எடுத்த எடுப்பிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் கைவைத்தால் மக்கள் அதனை விரும்ப மாட்டார்கள்.

எமக்கு இன்னும் 4 வருடங்கள் உள்ளன. தற்போதுள்ள அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய பணியின்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும், புதிய தேர்தல் முறைமை உருவாக வேண்டும், அனைத்து மக்களுக்கும் உரிமைகள் கிடைக்கக்கூடிய வகையில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய யோசனைகள் இருக்க வேண்டும், மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இவற்றை உள்ளடக்கிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதற்கு கால மெடுக்கும். நிபுணர்கள் மற்றும் மக்களின் கருத்துகளை உள்வாங்கி அரசமைப்பு தயாரிக்கப்படும். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்படும்." – என்றார்.






# வவுனியாவில் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு

(கி.வசந்தன்)

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவு தினம் வவுனியாவில் உள்ள வாடிவீட்டில் நடைபெற்றது.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர் சார்பாக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர்

அத்துடன் மாணவர்களுக்கான வினா விடை மற்றும் நடனப் போட்டிகளும் இடம்பெற்றதுடன் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த அஞ்சலி நிகழ்வில் கரைச்சி

சட்டத்தரணி மணிவண்ணன், யாழ் மாவட்ட போராளிகள் நலன்புரிச் சங்கத் தலைவர் ஈஸ்வரன் மற்றும் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் முக்கியஸ்தர்கள், அரசியல் பிரமுகர்கள், முன்னாள் போராளிகள் மற்றும் பொது









# திலீபன் தியாகச் சுடரால் மீண்டும் அரசியல் எழுச்சியை கட்டியெழுப்புவோம்

## அருட்தந்தை சத்திவேல் தெரிவிப்பு



(பா.சதீசன்)

திலீபன் தியாகச் சுடரால் அரசியல் எழுச்சியை மீண்டும் கட்டியெழுப்புவோம் என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று (23) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய மக்கள் சக்தி அரசு தமிழர் தாயகமான வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழர்கள் அவர்களுக்கு அளித்த வாக்குகளை தமது அரசுக்கான அலங்கார ஆடை ஆக்கிக் கொண்டு தமிழர் தாயகத்தையும் தாயக அரசியலையும் துகிலுரிய எடுக்கும் செயற்பாடுகளை தியாகத் தீபம் திலீபன் நினைவு நாளில் நாம் ஏற்றும் சுடரொளி சுட்டெரிக்க வேண்டும். தேசியம் காக்கும் உயரிய இலட்சியத்தோடு சுடர் ஏற்றுவோம்.

தியாகி திலீபனின் உயிர் கொடை காந்திய நாட்டின் உண்மை முகத்தையும் ஆதிக்க ஆக்கிரமிப்பு அரசியலையும் சிங்கள பௌத்தத்தின் தமிழர்களுக்கு எதிரான கொடூரத்தையும் முழு உலகத்துக்கும் வெளி காட்டியது. புலிகளுக்காகத் திரண்ட தமிழ் தேச மக்கள் இரத்தம், கண்ணீர் தமிழர்களின் அரசியல் தாகத்துக்கும் அரசியல் எழுச்சிக்கும் புத்துயிர் அளித்து புதுப்பாதை திறந்தது.

திலீபன் உயிர் கொடையாகி 38 வருடங்கள் கடந்த நிலையிலும் ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்டு பதினாறு வருடங்கள் கடந்த நிலையிலும் திலீபன் முன்வைத்த கோரிக்கைகளுக்கான பெறுமதி இன்னும் குறையவில்லை.

யுத்த குற்றங்களுக்கான நீதி, இனப் படுகொலைக்கான நீதி, தமிழர்கள் ஏற்கும் நியாயமான அரசியல் தீர்வு எதனையும் பெற்றுக் கொடுக்க மறுக்கும் சிங்கள பௌத்த இருண்ட கருத்து அரசியல் தற்போதைய தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலும் தொடர்கின்றது.

போர் குற்ற விசாரணைகளுக்கு சர்வதேச தலையீட்டை ஏற்றுக்கொள்ள மாட்டோம். உள்ளக விசாரணை வழிமுறையை உருவாக்குவோம். காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை நடத்தி உண்மையில் காணாமலாக் கப்பட்டார்களா? என்பதை கண்டறிவோம். சிங்கள மக்கள் மகிழும் யாப்பு சீர்திருத்தத்தை கொண்டு வருவோம் என மீண்டும் மீண்டும் கடந்த கால ஆட்சியாளர்கள் போல் தற்போதைய ஆட்சியாளர்களும் கூறுவது நடந்த இன அழிப்பு, இனப்படுகொலை என்பவற்றை மறுப்பதற்கு மட்டுமல்ல அதனையே தொடர்வதற்குமாகும்.

பெரும்பான்மையின சிங்கள பௌத்த மக்கள் விரும்பி மகிழும் அரசியல் யாப்பையே 1972, 1978 இல் சிங்கள பௌத்த பேரின வாதிகள் உருவாக்கினார். அதனை மையப்படுத்தியே இன அழிப்பையும் இனப் படுகொலையையும் தொடர்ந்தனர். அதனைத் தொடர்வதற்கான புதிய வடிவம் கொண்ட யாப்பையே கொண்டு வருவோம் என தற்போதைய ஆட்சியாளர்களும் கூறுவது சிங்கள பௌத்தர்களை மகிழ்விக்கவே. அதுவே நாட்டுக்கான அழிவு என்பதை எவரும் சிந்திப்பதாகவும் தெரியவில்லை. சிந்திக்கும் ஒரு சிலரும் மௌனம் காக்கின்றனர்.

மாவீரர் துயிலும் இல்லங்களைத் துவம்சம் செய்த முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய மீது கொண்டுள்ள கோபம் இனப்படுகொலையின் கொடூரத்தின் அதன் அவலத்தின் அடையாளமான வட்டுவாகால் பாலத்தை அழிக்கும் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார மீது எழவில்லையே ஏன்? இதுவும் இனப்படுகொலையின் மாற்று வடிவமே. இத்தகைய மாற்று வடிவத்தின் கதாநாயகனுக்கு மேள தாளத்துடனான செங்கம்பள வரவேற்பு, நெற்றியில் திலகம், ஆராத்தி, பொன்னாடை போர்த்தல் இவையெல்லாம் நிகழ்த்துவது எம்மை நாமே அழிக்கும், அழிக்க வைக்கும் சிங்கள பௌத்த அரசியல் உத்தி.விட்டில் பூச்சிகளாகி வீழ்ந்துள்ளோம். இது தோற்கடிக்கப்படல் வேண்டும்.

தியாகி திலீபனின் உருவச் சிலை முன், தியாகத்தின் அடையாளமாக ஏற்றப்படும் சுடர் முன் எம் அரசியல் எழுச்சியை அடையாளப்படுத்தி எழுவோம். எம்மை அரசியல் திக்கற்றவர்களாக்கத் துடிக்கும் அரசியல் எதிரிகளை அடையாளப் படுத்தி அகற்றுவோம். அதுவே எம்மை திரட்சியாக்கி பலப்படுத்தும். தியாகி திலீபனின் வழியில் அரசியலை முன் நகர்த்துவோம். அதுவே திலீபன் கண்ட கனவுக்கு நன்றி கடனாக அமையும். இலட்சிய கூட்டு அரசியலாகவும் அமையும்.– என்றுள்ளது.

# மெல்பேர்னில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியீடு ஒக்ரோபர் 25 இல்!

ஆஸ்திரேலியா, மெல்பேர்ண் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

"தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்", "இலத்தீன் அமெரிக்காவில்தேசிய இனமுரண்பாடுகள்", "ஆபிரிக்கதேசிய இனங்களும்சுயநிர்ணய விடுதலையும்", "முரண்பாடுகள் முற்றிய அரபுலகின்தேசிய இனங்கள்", "தென்கிழக் காசிய விடுதலைப் போராட்டங்கள்", "இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும்"ஆகியஐங்கரன்விக்கினேஸ்வராவின் ஆறு நூல்களே இவ்வாறு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் 25 ஆம் திகதி சனிக்கிழமை வலென் மத்திய கலை மண்டபம், வெர்மான்ட் மேல்நிலைக் கல்லூரி, 27-63 மொராக் சாலை, வெர்மான்ட், விக்டோரியா 3133 (Fallon Centre Auditorium, Vermont Secondary College, 27-63 Morack Road, Vermont VIC 3133) எனும் முகவரியில் உள்ள மண்டபத்தில் மாலை 4 மணி முதல் 7 மணி வரை இந்த வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு பாடும்மீன் சு. ஸ்ரீகந்த ராசாவின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நூல் வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் அறிமுக உரையை ரமேஷ் பாலா நிகழ்த்துவார்.

அத்துடன் நூல்களின் ஆய்வுரைகளை மெல்பேர்ண் இலக்கிய ஆர்வலர்கள் வழங்குவர்.தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள் எனும் நூல் ஆய்வுரையை ராஜா கருப்பையா நிகழ்த்துவார்.

ஆபிரிக்க தேசிய இனங்களும் சுயநிர்ணய விடுதலையும் என்ற நூல் ஆய்வுரையைதிருமதிநித்யாதர்மசீலன்நிகழ்த்துவார்.

முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள் குறித்த நூல் ஆய்வை ஜுட் பிரகாஷ் நிகழ்த்துவார்.

இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும் என்ற நூல் குறித்த ஆய்வை ருத்ராபதி நிகழ்த்துவார். அத்துடன் இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள் பற்றிய நூலாய்வை ஆவூரான் சந்திரன் நிகழ்த்துவர்.

தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும் என்ற நூல் ஆய்வுரையை கிறிஷ்டி நல்லரட்ணம் நிகழ்த்துவார்.

அத்துடன் இந்நிகழ்வில் சிறப்புரையை மெல்பேர்ண் புகழ் சட்டத்தரணி ரவிந்திரன் நிகழ்த்துவார்.

மெல்பேர்ண் மாநகரில் நிகழும் இந்த நூல் வெளியீட்டின் ஏற்புரையை நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பந்து நமது களத்துக்குள்!

நாட்டில் கடந்த கால குற்றங்கள் குறித்த விசாரணைகளை விரைவுபடுத்துவதற்காக, தடயவியல் நிபுணர்கள் உட்பட, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் மூலம் தொழில்நுட்ப உதவியைப் பெறும் விடயத்தில் இலங்கை திறந்த நிலைப்பாட்டில் இருக்கிறது என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டின் பல பகுதிகளில் தோண்டி எடுக்கப்படும் மனித புதைகுழிகளில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான உதவியும் இத்தகைய ஒத்துழைப்பில் அடங்கும் என்று வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் கூறியிருக்கின்றார். இந்த உதவியைப் பெறுவது, மனிதப் புதைகுழிகள் தோண்டி எடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நீதிமன்றத்தின் உத்தரவுகளைப் பொறுத்தது என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

ஆக, பந்தை அவர் இப்போது வளமாக விளையாடி, நீதிமன்றங்களின் களத்துக்குள் அடித்து விட்டிருக்கிறார். இது போன்ற சர்வதேச நிபுணத்துவம் பெறும் விடயங்களில் சட்ட முன்மாதிரிகள், வழிகாட்டல்கள், முன் அனுபவங்கள் அண்மைக் காலங்களில் இல்லாத காரணத்தினால் மனிதப் புதைகுழிகளை அகழும் பணியை முன்னெடுக்கும் நீதிமன்றங்கள் இதற்கு மேல் சர்வதேச தரப்புகளின் நிபுணத்துவங்களை உள்வாங்குவதில் முன்நகர முடியாமல் தரித்து நிற்கும் சாத்தியம் உண்டு. அதே சமயம், இப்படி சர்வதேச அரங்கில் பகிரங்கமாக அறிவித்து விட்டமையினால், சர்வதேச நிபுணத்துவ உதவி பெறப்படாமைக்கான குற்றச்சாட்டு இனிமேல் அரசின் மீது வராமல் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் அவர் எண்ணியிருக்கக் கூடும்.

ஆகவே, இந்த இந்த நிலைமையிலிருந்து இந்த விவகாரத்தை - அதாவது மனிதப் புதைகுழி அகழ்வின்போது மீட்கப்படும் எலும்புக்கூடுகளை அடையாளம் காண்பதற்கு சர்வதேச நிபுணத்துவ உதவி பெறும் விடயத்தை - நீதிமன்றங்களில் இருந்து முன்நகர்த்த வேண்டிய பொறுப்பு பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பின் சட்டத்துறை வட்டாரங்கள் மீது விழுந்திருக்கின்றது.

இனி விவகாரத்தை தாமதம் இன்றி நாங்களே நீதிமன்றத்தில் நகர்த்த வேண்டும்.

மீட்கப்பட்ட என்புக்கூடுகளை அடையாளம் காணும் விவகாரத்தில் சர்வதேச நிபுணத்துவ உதவியை பெறுவதற்கு அரசு முடிவு செய்திருக்கின்றமையையும் அங்கீகரித்திருக்கின்றமையையும் சுட்டிக்காட்டி அதிலிருந்து விடயத்தை முன்னெடுக்க நீதிமன்றத்தில் தமிழர்களின் சட்டத்தரணிகள் காய் நகர்த்த வேண்டும்.

மரபணு ரீதியாக எலும்புக்கூடுகளை அடையாளம் காண்பதற்காக மரபணு அடையாள சேமிப்பு வங்கி ஒன்றை உருவாக்குதல் உட்பட அடுத்த கட்ட நகர்வுக்கான திசையை நோக்கி நீதிமன்றங்கள் மூலம் விடயங்களை நகர்த்துவது பாதிக்கப்பட்ட தரப்பினரின் சட்டத்தரணிகளது கடமையாகின்றது.

மேலும் தாமதிக்காமல் அதற்கான விண்ணப்பங்களை மன்றில் சமர்ப்பித்து, விவகாரங்களை முன்னெடுப்பது பொருத்தமானது. உடனடியாக அது செய்ய வேண்டியது என்று நினைக்கிறோம்.

இது விவகாரத்தில் அரசின் முடிவு - தீர்மானம் - சட்டரீதியாக அல்லது சுற்றுநிருப ஆவண ரீதியாக வந்த பின்னர்தான் சட்ட நகர்வு என்று காத்திருந்தால், விடயம் நகராமலே போய்விடும். ஆகவே வெளிவிவகார அமைச்சரின் அறிவிப்பை முன்னிறுத்தி, விடயத்தை எவ்வாறு சட்டரீதியாக நகர்த்தலாம் என்பது குறித்து நமது சட்ட வட்டாரங்கள் ஆலோசிப்பது நல்லது.

# குச்சவெளி பிரதேச உள்ளூராட்சி வார தேசிய வேலைத்திட்டம் முடிவுற்றது!





(அபு அலா)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு குச்சவெளி பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகம் இணைந்து நடத்திய "வளமான நாடும் – அழகான வாழ்க்கையும்" எனும் தொனிப்பொருளில் "மறுமலர்ச்சி நகரம்" எனும் தேசிய வேலைத்திட்டம் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை குச்சவெளி பிரதேச சபையில் இடம்பெற்றது.

குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் எ.முபாறக் தலைமையில் இடம்பெற்ற இந்த இறுதிநாள் இந்நிகழ்வின்போது தெரிவு செய்யப்பட்ட வியாபாரிகளுக்கான சான்றிதழ்களை தவிசாளர் எ.முபாறக் வழங்கி வைத்தார்.

இந்த நடமாடும் சேவையில் சுற்றுச்சூழல், கிராம மட்ட பிரச்சினைகள், தேசிய அடையாள அட்டை, அஸ்வெசும நலன் புரித் திட்டம், ஆதன வரி, காணி, கட்டடம், வியாபார அனுமதிப் பத்திரம், முறைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டதோடு, அவைகள் தொடர்பான ஆலோசனைகளுடன் வழிகாட்டல்களும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.

குச்சவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட 87 குடும்பங்களுக்கான காணி உறுதிப்பத்திரம், மத ஸ்தலங்களுக்கான உபகரணங்கள், வியாபாரப் பத்திரங்கள், மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கான சான்றிதழ் மற்றும் கிண்ணங்கள், சிறு கைத்தொழில் முனைவோருக்கான வியாபார அனுமதிப் பத்திரங்கள் போன்றன வழங்கி வைக்கப்பட்டன.

குச்சவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களில் தீர்க்கப்படாத பல்வேறுபட்ட பிரச்சினைகள் கடந்த பல வருடங்களாக இருந்து வந்தன. இந்தப் பிரச்சினைகளில் பலவற்றுக்கு உள்ளூராட்சி வார நிகழ்வு நாள்களில் தீர்வு காணப்பட்டது என்று பொது மக்களும், வியாபாரிகளும், சிறு கைத்தொழில் செய்வோரும் தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.



# களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவில் யானைகளால் தோட்டச் செய்கை பாதிப்பு!





(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் யானைகளால் தோட்டச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் அச்சத்துடன் வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே காட்டுயானைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை முன்னெடுக்குமாறும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட செட்டிபாளையம், மாங்காடு, தேற்றாத்தீவு, களுதாவளை ஆகிய பகுதிகளில் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றது.

தேற்றாத்தீவு பகுதிக்குள் புகுந்த யானைகளால் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. யானையின் அட்டகாசம் காரணமாக மிளகாய், சோளன், கச்சான், கத்தரி போன்ற பல்வேறு பயிர் தோட்டங்களில் சேதமேற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான யானையின் அட்டகாசங்கள் தற்போதுதான் இப்பகுதியில் ஆரம்பித்துள்ளன என்றும் இதற்கு முன்னர் ஆற்றுக்கு அப்பால் உள்ள கரை பகுதிகளில் யானையின் அசம்பாவிதங்கள் இடம் பெற்றதாகவும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் அசமந்த போக்காக செயல் படுகின்றனர் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இதுவரை காலமும் யானை தேற்றாத்தீவு பகுதிக்குள் வந்ததில்லை. இதுவே முதல் தடவை எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.




# நாட்டின் புதிய இணைய அச்சுறுத்தல்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடு!

2025 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மட்டும் 5,400 இற்கும் மேற்பட்ட இணையக் குற்றச் சம்பவங்கள் இலங்கையில் பதிவாகியுள்ளன என்று இலங்கையின் CERT அறிக்கைகள் கூறுகின்றன.

இதில் சமூக ஊடக மோசடிகள் முதலிடத்தில் உள்ளன. 2024 இல் 20,000 இற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகியுள்ளன.

அதைத் தொடர்ந்து ransomware தாக்குதல்கள்,தொலைபேசி ஹேக்கிங் மற்றும் தீங்கிழைக்கும் மென்பொருள் சிக்கல்கள் போன்றனவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. முயளிநசளமல அறிக்கைகளின்படி இணைய அச்சுறுத்தல்களுக்கு ஆளாகும் உலகளாவிய தரவரிசையில் இலங்கை 22 ஆவது இடத்தில் உள்ளது. இப்புள்ளி விவரங்கள் நாட்டின் எதிர்கால இணைய பாதுகாப்பு தேவையை உணர்த்துகின்றன.




இலங்கையின் தேசிய சைபர் பாதுகாப்பு செயற்பாட்டு மத்திய நிலையம் (NCSOC) அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அதாவது செபரெம்பர் 19. 2025 அன்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வால் இவ் மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஏநுரழவ்தேசிய சைபர் பாதுகாப்பு மூலோபாயம் (2025-2029)& quot என்ற திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையம் (NCSOC) என்பது இலங்கையின் டிஜிட்டல் உள்கட்டமைப்பை பாதுகாக்க உருவாக்கப்பட்டுள்ள ஒரு முக்கிய அமைப்பாகும். இது இலங்கை ஊநுசுவு மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படுகிறது. நாட்டின் முக்கியமான டிஜிட்டல் சேவைகளைப் பாதுகாப்பதும் சைபர் அச்சுறுத்தல்களைக் கையாள்வதும் இதன் முதன்மை நோக்கங்களாகும். இலங்கையில் அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் இணையப் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டிய அவசியத்தின் காரணமாக ஏஊளுழஊ உருவாக்கப்பட்டது. நாட்டில் அதிகரித்துவரும் சைபர் தாக்குதல்களை எதிர்கொள்ளவும் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மற்றும் அரச சேவைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் இது ஒரு முக்கியமான படியாகக் கருதப்படுகிறது.

### தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையத்தின் நோக்கம்

முக்கியமான டிஜிட்டல் சேவைகளை 24 மணி நேரமும் கண்காணித்துஅபவ் சைபர் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் பாதிப்புகள் போன்றவற்றைக் கண்டறிந்து, அவற்றை எதிர்கொள்வதே இதன் முதன்மை நோக்கம் ஆகும். இதன் மூலம், நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் பாதுகாப்பாக இருப்பதை NCSOC உறுதி செய்கிறது.

தொடர்ச்சி▼

# நாட்டின் புதிய இணைய அச்சுறுத்தல்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடு!

தொடர்ச்சி▲

## பொதுமக்கள் பயனும் அணுகுமுறையும்

பாதுகாப்பு: NCSOC&gt அரசு நிறுவனங்களான குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், போக்குவரத்துத் திணைக்களம் போன்ற முக்கிய இணையதளங்களைப் பாதுகாக்கிறது. இதனால், பொதுமக்கள் தங்கள் தனிப்பட்ட தகவல்கள்



பாதுகாப்பாக இருப்பதையும், இந்தச் சேவைகளைத் தடையின்றிப் பயன்படுத்த முடிவதையும் உறுதி செய்கிறது.

விழிப்புணர்வு: NCSOC&gt சைபர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்துகிறது. இணைய மோசடிகள், ஃபிஷிங் (Phishing) தாக்குதல்கள் போன்ற ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம், பொது மக்கள் தங்கள் டிஜிட்டல் வாழ்க்கையை பாதுகாப்பாகக் கொண்டு செல்ல உதவுகிறது.

பொது மக்கள் இதன் சேவையை அணுகும் முறை: தனிப்பட்ட நபர்களோ அல்லது பொது மக்களோ ஒரு சைபர் தாக்குதலை எதிர்கொண்டாலோ அல்லது சந்தேகித்தாலோ, அவர்கள் நேரடியாக NCSOCஐ அணுக முடியாது. அதற்குப் பதிலாக, இலங்கை CERT இன் அவசர தொலைபேசி எண் +94 11 267 9253 அல்லது மின்னஞ்சல் முகவரி report@cert.gov.lk மூலம் புகாரளிக்கலாம். இந்த மையம் பொதுமக்களின் புகார்களை CERT மூலம் பெற்றுத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

## இணைய பாதுகாப்புக்கு இடையிலான வேறுபாடுகள்

2022 ஆம் ஆண்டு முதல் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ICTA) கீழ் இணைய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் முக்கிய நோக்கம், இணைய அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டின் முக்கியமான உள்கட்டமைப்பைப் பாதுகாப்பதுடன், இணையப் பாதுகாப்பை மேம்படுத்துவது ஆகும். இது சைபர் தாக்குதல்களைக் கண்டறிந்து விரைவாகப் பதிலளிக்கும் திறனுடன் செயற்பட்டது.

புதிய தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையத்தின் நிலையமானது (2025) தேசிய சைபர் பாதுகாப்பு மூலோபாயம் (2025-2029) அறிமுகப்படுத்தப்பட்டதன் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த புதிய மையம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், போக்குவரத்துத் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்ற 37 இற்கும் மேற்பட்ட முக்கியமான டிஜிட்டல் உள்கட்டமைப்பு அமைப்புகளை 24 மணி நேரமும் கண்காணித்து சைபர் அச்சுறுத்தல்களைக் கண்டறியும். இது டிஜிட்டல் பொருளாதார அமைச்சகத்தின் கீழ் இலங்கை கணினி அவசர தயார் நிலைக் குழு (CERT) உடன் இணைந்து செயல்படுகிறது.

## இலங்கையின் தேசிய இணைய பாதுகாப்பு மூலோபாயம்

இலங்கையின் தேசிய இணையப் பாதுகாப்பு மூலோபாயம் 2025- 2029 நாட்டின் இணையப் பாதுகாப்புக்கான ஒரு விரிவான திட்டமாகச் செயல்படுகிறது. இந்த மூலோபாயம் ஜூலை 2025 இன் நடுப்பகுதியில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. உலக வங்கி மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) ஆகியவற்றின் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை ஆதரவுடன் இது உருவாக்கப்பட்டது.

புதிய மூலோபாயம் ஆறு முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டது.

1. சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை மேம்படுத்துதல் - வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் சட்டங்களை வலுப்படுத்துதல்.

2. பொது விழிப்புணர்வை அதிகரித்தல் - இணையப் பாதுகாப்பு குறித்த பொதுமக்களின் அறிவை மேம்படுத்துதல்.

3. இணையப் பாதுகாப்பை மேம்படுத்துதல் - சம்பவங்களுக்குப் பதிலளிக்கும் திறன்களை வலுப்படுத்துதல்.

4. தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவித்தல் - உலகளாவிய இணைய அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராட பிற நாடுகளுடன் இணைந்து செயல்படுதல்.

5. திறமையான பணியாளர்களை உருவாக்குதல் - இத்துறையில் உள்ள திறமையான நிபுணர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல்.

6. டிஜிட்டல் அரசு அமைப்புகளின் நெகிழ்வுத் தன்மையை வலுப்படுத்துதல் - அரசு அமைப்புகளின் இணையப் பாதுகாப்பை உறுதி செய்தல்.

உலகளாவிய இணையப் பாதுகாப்பு குறியீட்டில் (GCI) ஏுபவ் இலங்கை 100 இற்கு 85 முதல் 95 வரையிலான மதிப்பெண்ணுடன் மேம்பட்ட பிரிவில் உள்ளது. சட்ட மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளில் இலங்கை சிறப்பாக செயல்பட்டாலும் உலகளாவிய இணைய அச்சுறுத்தல்களைத் திறம்பட எதிர்கொள்ள நிறுவன நடவடிக்கைகள் மற்றும்

தொடர்ச்சி▼

# நாட்டின் புதிய இணைய அச்சுறுத்தல்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடு!

தொடர்ச்சி▲

சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும். ஒரு நாட்டின் இணைய பாதுகாப்பு தரப்படுத்தல் என்பது சட்டங்கள் மற்றும் தேசிய பாதுகாப்பில் மட்டுமல்ல, தனிநபர் பாதுகாப்பிலும் தங்கியுள்ளது. ஆகவேதான் பொது மக்களும் இணைய தொடர்புகளில் விழிப்புணர்வுடன் செயல்படுதல் அவசியம்.

**மு.நிமியா,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**



# கல்முனை டிப்போவுடன் இணைக்கப்பட்ட சம்மாந்துறை போக்குவரத்து சபை டிப்போ!

## சம்மாந்துறைக்கு மீண்டும் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை



(கே. எ. ஹமீட்)

கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில் போக்குவரத்து சபை டிப்போக்களுக்கு புதிய பஸ்களை வழங்குவதுடன், தற்காலிகமாக கல்முனை டிப்போவுடன் இணைக்கப்பட்ட சம்மாந்துறை போக்குவரத்துச் சபை டிப்போவை சம்மாந்துறைக்கு மீண்டும் வழங்க வேண்டும்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் விஷேட கூட்டத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் விஷேட கூட்டம் அமைச்சர் பிமல் ரத்னாயக்க தலைமையில் அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பாக நான் நாடாளுமன்றத்திலும் அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்திலும், இலங்கை போக்குவரத்து சபைத் தலைவரிடமும் கோரிக்கை விடுத்தேன். சம்மாந்துறை இலங்கை போக்குவரத்து சபை டிப்போவுக்கான இடங்கள், அதற்கான வசதிகள் எல்லாம் இருப்பதால் மீண்டும் சம்மாந்துறையில் டிப்போவை இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் பிமல் ரத்னாயக்க மேற்கொள்ள வேண்டும்.– என்றார்.

கல்முனை டிப்போவுடன் இணைக்கப்பட்டுள்ள சம்மாந்துறை டிப்போவை மீண்டும் சம்மாந்துறையில் இயங்க வைப்பது தொடர்பான விளக்கங்களை வழங்குமாறும் கிழக்கு மாகாண இலங்கை போக்குவரத்து சபையின் பிராந்திய பணிப்பாளர் விஜித்தவை அமைச்சர் பிமல் ரத்னாயக்க பணித்தார்.

இது விடயமாக விளக்கமளித்த கிழக்கு மாகாண இலங்கை போக்குவரத்து சபையின் பணிப்பாளர் விஜித்த, கல்முனைக்கும் சம்மாந்துறைக்கும் இடையில் 7 கிலோ மீற்றர் தூரம் உள்ளதாகவும் சம்மாந்துறை முஸ்லிம் பள்ளிவாசல் சம்மாந்துறை டிப்போ தொடர்பாக கடிதம் ஒன்றை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை, சம்மாந்துறையில் 82 ஆயிரம் மக்கள் வாழும் பிரதேசமாகும். சம்மாந்துறை பிரதேசம் நகரமாக மாறி வரும் இக்கால கட்டத்தில் தற்காலிகமான முறையில் இணைக்கப்பட்ட சம்மாந்துறை டிப்போவை சம்மாந்துறைக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். சம்மாந்துறை டிப்போவுக்கான இடம், காணி, கட்டடங்கள் உள்ளன என்றும் இது தொடர்பாக சம்மாந்துறை பிரதேச செயலாளரை விளக்கங்களை தெரிவிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

அதனையடுத்து விளக்கமளித்த சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, தற்காலிகமான முறையில் கல்முனை டிப்போவுடன் இணைக்கப்பட்டுள்ள சம்மாந்துறை டிப்போவுக்கான சகல வசதிகளும் உள்ளன என்றும் சம்மாந்துறை மக்கள் போக்குவரத்துக்கு சம்மாந்துறை டிப்போ மிக முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ சம்மாந்துறை மக்களின் போக்குவரத்துக்கு அவசியமான டிப்போவை சம்மாந்துறைக்கு கொண்டு வருவதில் என்ன பிரச்சினை உள்ளது? எனவே, மக்கள் பிரதிநிதிகள் இந்த விடயத்தில் ஒன்றிணைந்து கோரிக்கை விடுக்கின்றனர். எனவே, சம்மாந்துறை டிப்போவை மீண்டும் கொண்டு வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா சம்மாந்துறை டிப்போவை மீண்டும் சம்மாந்துறையில் இயங்க வைப்பதால் சம்மாந்துறை டிப்போ அதிக வருமானம் ஈட்டும் டிப்போவாக மாறும் எனவும் மீண்டும் சம்மாந்துறையில் இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

கல்முனையில் தற்காலிகமான முறையில் இணைக்கப்பட்டுள்ள சம்மாந்துறை டிப்போவை மீண்டும் சம்மாந்துறைக்குக் கொண்டு வருவது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை விடுப்பதாலும், சம்மாந்துறை பிரதேச செயலாளர், சம்மாந்துறை டிப்போவுக்கான வசதிகள் உள்ளதென தெரிவித்துள்ளார்.

எனவே, முஸ்லிம் பள்ளிவாயல் கடிதம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பையை தொடர்பு கொண்டு கடிதத்தைப் பெற்று சம்மாந்துறை டிப்போவை மீண்டும் சம்மாந்துறையில் இயங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க போக்குவரத்து அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.



# தேசிய புகைப்படப் போட்டியில் பாண்டிருப்பு நிதுர்ஷன் சாதனை







**(வி.ரி. சகாதேவராஜா)**

தேசிய ரீதியில் நடைபெற்ற புகைப் படப் போட்டியில் பாண்டிருப்பைச் சேர்ந்த மாதவராஜா நிதுர்சன் இரண்டாம் இடத்தை பெற்று 75 ஆயிரம் ரூபா ணப் பரிசையும் சான்றிதழையும் பெற்றுள் ளார்.

Dilmah Conservation நிறு வனம் நடத்திய "Life in a Changing World" என்ற தலைப்பிலான தேசிய ரீதியிலான புகைப்படப் போட்டியில், Open Categoryயிலேயே பாண்டி ருப்பைச் சேர்ந்த புகைப்படக் கலை ஞர் மாதவராஜா நிதுர்சன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்தப் போட்டிக்காக சிறந்த 70 புகைப் படங்கள் காட்சிப்படுத்தப்பட்ட நிலை யில், இவரது புகைப்படம் இரண்டாம் இடத் துக்குத் தெரிவாகி, 75 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு கொழும்பில் உள்ள Genesis by Dilmah: Centre யில் அண்மையில் நடைபெற்றது.



# வரணி பொது நூலகத்தை மேம்படுத்தும் கலந்தாய்வு

வரணி பொது நூலகத்தை மேம் படுத்தும் நோக்கோடு தேசிய ஒரு மைப்பாட்டு அமைச்சின் அலுவலர் கள் களவிஜயம் மேற்கொண்டு நூல கத்தின் தேவைப்பாடுகள் முன்னேற் றங்கள் பற்றிக் கலந்துரையாடியுள்ள னர்.

இந்த நூலக கள விஜயத்தில் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோ கத்தர், நூலகர், கிராமமட்ட உத்தி யோகத்தர்கள்,சகவாழ்வுச்சங்க உத்தி யோகத்தர்கள் கலந்துகொண்டனர்.





# சம்மாந்துறையில் களைகட்டிய உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு!

( வி.ரி. சகாதேவராஜா)

"வளமான நாடும் – அழகான வாழ்க்கையும்" எனும் தொனிப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்ட உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, சம்மாந்துறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இறுதி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் (21) ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா கலந்து கொண்டார்.

நிகழ்வின் கௌரவ அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாகச் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ, ஏ.என்.பிரத்தீப் குமார, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நௌசாத் முஸ்தபா, சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த ஒரு வார காலமாக இடம்பெற்ற உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் போது பங்குபற்றியவர்கள் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளின் போது வெற்றிபெற்றவர்களுக்கான, பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.











# பனை சார் கைப்பணி பயிற்சி நெறியை மேற்கொண்டோருக்குச் சான்றிதழ் வழங்கல்





**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

பனை அபிவிருத்தி சபையினூடாக பனை சார் கைப்பணி பயிற்சி நெறியை மேற்கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் தெரிவு செய்யப்பட்ட பனை உற்பத்தியாளர்களுக்கான உப கரணங்கள் வழங்கும் வைபவமும் மன்னார் மாவட்ட செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை (21) நடைபெற்றன.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் கலந்து கொண்டார்.

தொழில் அமைச்சின் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன், பெருந்தோட்ட அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளர் வசந்த மூர்த்தி, பனை அபிவிருத்தி சபைத் தலைவர் மற்றும் அதன் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், மன்னார் நகர சபை, நானாட்டான் பிரதேச சபை தவிசாளர்கள் மற்றும் பனை உற்பத்தியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அதனை தொடர்ந்து மன்னார் எழுத்தூர் பிரதேசத்தில் பனை விதை நடும் நிகழ்வும் இடம்பெற்றது.

# யாழ்.மாவட்டச் செயலக நலன்புரி சங்க ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாண மாவட்டச் செயலக நலன்புரி சங்கத்தால் வருடாந்தம் நடத்தப்படும் குருதிக்கொடை நிகழ்வு நலன்புரிச் சங்க தலைவரும் புள்ளி விவரப் பிரிவின் பிரதிப் பணிப்பாளருமான ம.வித்தியானந்தநேசன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக மண்டபத்தில் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

இந்த இரத்ததான ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவின் வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.சண்முகப்பிரியா, மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

இரத்ததான நிகழ்வில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் 31 பேர் குருதிக் கொடை வழங்கியிருந்தனர்.







# தியாக தீபம் திலீபனின் 38ஆவது நினைவேந்தல் பருத்தித்துறையில்

(வடமராட்சி)

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் பருத்தித்துறை தியாகி திலீபனின் நினைவிடத்தில் வடமராட்சி மக்களால் நடத்தப்பட்டன.

இதில் முதல் நிகழ்வாக பொது ஈகைச் சுடரை மாவீரர் லெப்டினென்ட் தென்றலின் சகோதரரும், ஜனநாயக போராளிகள் கட்சி தலைவருமான சி.வேந்தன் ஏற்றிவைக்க மலர்மாலையைப் பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ்போல் அணிவித்தார்.

தொடர்ந்து பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் ஜெ.ஜயகோபி, காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவர் இ.முரளிதரன் ஆகியோர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பு பிரதிநிதி க.தவராசா மலரஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் அஞ்சலி செலுத்தினர்.

இதில் ஆயுள்வேத மருத்துவரும், தமிழ் மக்கள் கூட்டணி வடமராட்சி அமைப்பாளருமான சிவகுமார், காணி உரிமைக்கான இயக்க தலைவர் இ.முரளிதரன், ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் சி.வேந்தன், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள் திருமதி சுரேஸ்குமார் உட்பட பலரும் கலந்துகொண்டு தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.












## கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியின்

# 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் ஆசிரியர் தின விழா!

**(நூருல் ஹுதா உமர்)**

கிழக்கிலங்கையில் புகழ்பெற்ற பாடசாலையான கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவை சிறப்பிக்கும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகளில் ஒன்றான மாபெரும் ஆசிரியர் தின விழாவானது கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் ச. இ. ரெஜினோல்ட் தலைமையிலும் 125 ஆவது ஆண்டு நிறைவு குழுவின் செயலாளர் மற்றும் நிறைவேற்று உறுப்பினர்களின் சிறப்பான ஒழுங்குபடுத்தலில் பாடசாலையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அந்தப் பாடசாலையின் முன்னாள் அதிபர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக அருட் சகோதரர் எம்.ஸ்ரிபன் மத்தியு, அருட் சகோதரர் எப்.ஆர்.விரைனர் செலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

750 இற்கும் மேற்பட்ட ஓய்வு பெற்ற அதிபர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற கல்விசாரா ஊழியர்கள், இடமாற்றம் எடுத்து சென்ற ஆசிரியர்கள், இடமாற்றம் எடுத்து சென்ற கல்வி சாரா ஊழியர்கள், தற்போது பாடசாலையில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.













# முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலாளர்கள் மாநாடு துணுக்காய் பிரதேச செயலகத்தில்!



**(பா.சதீசன்)**

மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகத்தின் மூலம் மக்களுக்கு வினைத்திறனுடய சேவையை வழங்குவதை இலக்காக கொண்டு 2025 ஆம் ஆண்டுக்கான 9ஆவது (இரண்டாவது சுற்றின் மூன்றாவது) முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேச செயலாளர் மாநாடு இன்று (23) காலை துணுக்காய் பிரதேச செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக மாவட்ட பிரதேச செயலாளர் மாநாடு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பிரதேச செயலத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

இதன் பிரகாரம் இந்த ஆண்டுக்கான முதல் சுற்று மாநாடு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகங்களிலும் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.

மீண்டும் இந்த ஆண்டுக்கான இரண்டாவது சுற்றின் மூன்றாவது பிரதேச செயலாளர் மாநாடு இன்று துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு வருகைதந்த மாவட்ட அரச அதிபர் தலைமையிலான குழுவினர் பிரதேச செயலகத்தின் சுற்றுப்புறச் சூழலை அலுவலக முறைமை என்பவற்றை முதலில் பார்வையிட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற பிரதேச செயலாளர் மாநாட்டில், கடந்த முறை நடைபெற்ற மாநாட்டில் கலந்துரையாடப்பட்ட பல்வேறு விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் முதலில் கலந்துரையாடப்பட்டது.

விசேடமாக அரசால் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள 1500 மில்லியன் ரூபா பெறுமதியைக் கொண்ட கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் சமூக நலத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ந்து பிரதேச செயலகங்களின் நிர்வாக , நிதி, திட்டமிடல் செயற்பாடுகள், முன்னேற்றங்கள், குறைபாடுகள், சமூக நலச்சேவை செயற்பாடுகள், அபிவிருத்தித் திட்டங்கள், இந்த வருடத்தில் செயற்படுத்த வேண்டிய திட்டங்கள், 2025 வரவு செலவுத் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான நிதி ஓதுக்கீடு தொடர்பிலும் அதன் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும், துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் இனங்காணப்பட்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக முதலாவது சுற்று பிரதேச செயலாளர் மாநாட்டில் பிரதேச செயலக, மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மட்டுமே கலந்துகொண்டனர். இந்த முறை துணுக்காய் பிரதேச சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அமைப்புக்களின் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த மாநாட்டில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலன் (நிர்வாகம்), மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ஜெயக்காந்(காணி) மாவட்ட பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட பிரதம கணக்காளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்,மாவட்ட நலன்புரி நன்மைகள் சபையின் மாவட்ட இணைப்பாளர், மாந்தை கிழக்கு, துணுக்காய், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முதலான பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், மற்றும் எனைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# கிழக்கு மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ள அரசடித்தீவு பாடசாலை மாணவர் கௌரவிப்பு

**(மட்டக்களப்பு)**

தேசிய ரீதியில் சாதனை நிலைநாட டிய மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக் களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு உட் பட்ட அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்களைக் கௌர விக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (225) பாடசாலையில் அதிபர் மு.குணேச லிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத் துக்கு உட்பட்ட அரசடித்தீவு விக்னேஷ்வரா மகா வித்தியாலய மாணவிகள் இருவர் அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டியில் வெற்றி பெற்று சாதனையை நிலைநாட்டி பாடசாலைக்கும் சமூகத் துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

கொழும்பு விவேகானந்த கல்லூரியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு 4 இல் குறுநாடக ஆக்கம் முதலா மிடத்தை அப்பாடசாலையைச் சேர்ந்த அரிகரன் சப்தனாவும், கவிதையாக்கத்தில் முதலாமிடத்தை தே.திஷாந்தனாவும் 4 ஆம் பிரிவில் சிறுகதையாக்கப் போட்டி யில் 4 ஆம் இடம் க.ஹோகிலவதனாவும் பெற்றுள்ளனர். கராத்தே 17 வயது பிரிவு தேசிய மட்டத்தில் க.சுஷர்மன் பங்கு பற்றியுள்ளார்.

இந்த மாணவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவிக்கப்பட்டு கௌரவம் வழங்கப்பட்டது.

இச்சாதனையை நிலைநாட்டிய மாணவர்களையும் அவர்களை பயிற்று வித்த பாடசாலை ஆசிரியர், வழிப்படுத் திய அதிபர், ஆலோசனை வழங்கி ஊகு வித்த வலய தமிழ் பாட இணைப்பாளர், கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப் பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர், பெற்றோர் ஆகியோருக்கு வாழ்த்துகளை யும், பாராட்டுக்களையும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய கல்வி சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.











# நீரில் மூழ்கிய கொல்கத்தா நகர்; மின்சாரம் தாக்கி 5 பேர் உயிரிழப்பு!

கொல்கத்தா மற்றும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளில் இரவு பெய்த கன மழையால் இயல்பு வாழ்க்கை பாதிக் கப்பட்டது.

பல இடங்கள் முழங்கால் அளவு நீரில் மூழ்கி போக்குவரத்து முடங் கியது.

மழையின் மத்தியில், 5 பேர் மின் சாரம் தாக்கி உயிரிழந்தனர்.

இது துர்கா பூஜை கொண்டாட் டங்களுக்கு சில நாள்களுக்கு முன்பு பெய்த மழையின் கடுமையான தாக் கத்தை எடுத்துக்காட்டுகிறது.

நகரத்தின் பரந்த பகுதிகள் நீரில் மூழ்கியிருப்பதையும், வீதிகள் நீரில் மூழ்கியதால் பல வீடுகள் மற்றும் குடியிருப்பு வளாகங்களுக்குள் தண் ணீர் புகுந்ததையும் காட்சிகள் காட்டுகின்றன.

துர்கா பூஜைக்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடைபெற்று வரும் நிலையில், நகரத்தை இடைவிடாத மழை தாக்கியுள்ளது.

தண்ணீர் தேங்கியுள்ளதால் பந்தல் தயாரிப்பு பணிகள் பாதிக்கப்பட்டு, பண்டிகை சந்தைகள் பாதிக்கப்பட்டுள் ளன.







# எச்.1.பி. விசா கட்டண உயர்வால் அவசரமாக அமெரிக்கா புறப்பட்டு சென்றனர் இந்தியர்கள்

எச்1பி விசா கட்டண உயர்வு விவகாரத்தால் இந்திய இளைஞர்கள் திருமணத்தை ரத்து செய்து விட்டு அமெரிக்காவுக்கு புறப்பட்டு சென்றுள்ளனர்.

அமெரிக்காவில் தற்காலிகமாக பணியாற்றுவோருக்கு எச்1பி விசா வழங்கப்படுகிறது. 1.32 லட்சம் இந்திய ரூபாவாக இருந்த இந்த விசா கட்டணத்தை அமெரிக்க அரசு திடீரென 88 லட்சம் இந்திய ரூபாவாக உயர்த்தியது. புதிய கட்டண முறை நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது. அமெரிக்காவில் எச்1பி விசாவில் சுமார் 7.50 லட்சம் பேர் பணியாற்றி வருகின்றனர். அவர்களின் மனைவி, பிள்ளைகள் என சுமார் 6 லட்சம் பேரும் அமெரிக்காவில் வசிக்கின்றனர். இதில் 75 சதவீதம் பேர் இந்தியர்கள் ஆவர்.

எச்1 பி விசா கட்டண விதிகள் குறித்து முதல் நாளில் தெளிவான விளக்கம் அளிக்கப்படவில்லை. இதன்காரணமாக அமெரிக்காவின் மெட்டா, மைக்ரோசாப்ட் உள்ளிட்ட நிறுவனங்கள், வெளிநாட்டு ஊழியர்கள் அமெரிக்காவுக்கு திரும்ப அறிவுறுத்தியது.

அமெரிக்காவில் எச்1பி விசாவில் பணியாற்றும் இந்திய மென்பொறியாளர்கள் பலரும் நவராத்திரியை முன்னிட்டு சொந்த ஊர்களுக்கு வந்துள்ளனர். இதேபோல திருமணத்துக்காகவும் பலர் இந்தியாவுக்கு வந்துள்ளனர். எச்1பி விசா கட்டண உயர்வு விவகாரத்தால் இந்திய மென்பொறியாளர்கள் உடனடியாக அமெரிக்காவுக்கு புறப்பட்டு உள்ளனர். பெயர் வெளியிட விரும்பாத இந் திய மென் பொறியாளர் ஒருவர் கூறும் போது,

“நான் பணியாற்றும் நிறுவனத்தில் இருந்து உடனடியாக அமெரிக்காவுக்கு திரும்ப இ-மெயில் அனுப்பப்பட்டு உள்ளது. இதன்காரணமாக திருமணத்தை ரத்து செய்துவிட்டு அமெரிக்காவுக்கு புறப்பட்டு செல்கிறேன்” என்று தெரிவித்தார்.

இதேபோல ஏராளமான இந்திய இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் திருமணத்தை ரத்து செய்துவிட்டு அமெரிக்காவுக்கு புறப்பட்டு சென்றுள்ளனர்.

அமெரிக்காவில் பணியாற்றும் இந்திய மென்பொறியாளர் ஒருவர் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில்,

“அமெரிக்க அரசின் நடவடிக்கை அநீதியானது. ஒரு வாரம்கூட எனது தாயோடு தங்க முடியவில்லை. அமெரிக்க அரசை பொறுத்தவரை எச்1பி என்பது வெறும் விசா மட்டுமே. அந்த விசாவின் பின்னால் மனிதர்கள் உள்ளனர். அவர்களின் வாழ்க்கை அடங்கியிருக்கிறது. அனைத்தையும் இழந்து அமெரிக்காவுக்கு புறப்படுகிறோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# 24 ஆண்டுகளில் 1 நாள் கூட விடுமுறை எடுக்காத மோடி!

## அமித்ஷா புகழாரம்

கடந்த 24 ஆண்டுகளில் 1 நாள் கூட விடுமுறை எடுக்காத ஒரே தலைவர் பிரதமர் மோடி என மத்திய உட்துறை அமைச்சர் அமித் ஷா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த 24 ஆண்டுகளில் ஒரு நாள் கூட விடுமுறை எடுக்காத ஒருவரை நான் பார்த்திருக்கிறேன். அது பிரதமர் நரேந்திர மோடிதான். இத்தகைய அர்ப்பணிப்பு தற்செயலாக வருவதில்லை.பொது சேவைக்கான அவரது அர்ப்பணிப்பால் மட்டுமே இது சாத்தியமானது.



மோடி, உள்ளூர் மட்டத்தில் ஒரு கட்சி ஊழியராக தனது வாழ்க்கையைத் தொடங்கி பா.ஜ.கவின் தேசியத் தலைவராக உயர்ந்தார். பின்னர் குஜராத்தின் முதல்வரானார். பின்னர் மிகவும் பிரபலமான பிரதமரானார். மோடியின் செயல்திறனை அருகிலிருந்து பார்க்கும் அதிர்ஷ்டம் எனக்கு கிடைத்தது.” என்று தெரிவித்தார்.



# பிலிப்பைன்ஸில் 'ரகசா' புயல்; 10 ஆயிரம் பேர் வெளியேற்றம்

பிலிப்பைன்ஸில் ஏற்பட்டுள்ள 'ரகசா' புயல் காரணமாக, 10 ஆயிரம் பேர் வரை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன், சீனா, தாய்வான் போன்ற நாடுகளுக்கும் 'ரகசா' புயல் குறித்து முன்னெச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸின் வடக்கு பகுதியில் ககாயன் மாகாணம் அருகே 'ரகசா' என்ற புதிய புயல் உருவாகி உள்ளது.

இந்த புயல் காரணமாக, மணிக்கு 215 கிலோ மீற்றர் வேகத்தில், காற்று வீசுவதுடன், பலத்த மழை பெய்து வருவதாக பிலிப்பைன்ஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

'ரகசா' புயலின் எதிரொலியாக, நிலச்சரிவுக்கான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த புயல், சீனாவின் குவாங்டாங் மாகாணத்தை நோக்கி நகரும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதனால், அந்த நாட்டிலும் முன்னெச்சரிக்கை செயற்பாடாக, சுமார் 4 லட்சம் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றச் சீன அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், 500 இற்கும் மேற்பட்ட விமானச் சேவைகளும் இரத்து செய்யப்பட்டு உள்ளன என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அதன்படி, ஹொங்கொங் விமான நிலையம் 36 மணி நேரம் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புயல் கடக்கும் வழியில் உள்ள தைவானிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.











# விமானத்தின் சக்கரப் பகுதியில் அமர்ந்து காபூலில் இருந்து டில்லி சென்ற சிறுவன்



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருந்து நேற்று முன் தினம் புறப்பட்ட கே.ஏ.எம். விமானம் இரண்டு மணி நேர பயணத்துக்குப் பிறகு புது டில்லி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

அந்த விமானத்துக்கு அருகே சிறுவன் ஒருவன் சுற்றித் திரிந்து வருவதைக் கண்ட பாதுகாப்புப் படையினர் அவரைக் கைது செய்து விசாரித்தனர்.

காபூல் விமான நிலையத்துக்குள் நுழைந்து ஆர்வ மிகுதியால் விமானத்தின் நடுப்பகுதி சக்கரம் உள்ள இடத்தில் அமர்ந்து ஒளிந்து கொண்டதாக அந்தச் சிறுவன் தெரிவித்தார்.

சிறுவன் அமர்ந்து வந்த பகுதியில் சோதனை நடத்தியபோது சிறு ஒலி பெருக்கி இருந்தது தெரிய வந்தது.

அந்த விமானத்தில் நடத்தப்பட்ட முழு சோதனையில் எந்தவித சதிச் செயலும் இல்லை என உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, அதே விமானத்தில் ஆப்கானிஸ்தானுக்கு அந்தச் சிறுவன் திருப்பி அனுப்பப்பட்டார் என இந்திய பாதுகாப்பு வட்டார தகவல்கள் தெரிவித்தன.

# பாலஸ்தீனம் சுதந்திர நாடாக அங்கீகரித்தது பிரான்ஸ் அரசு



பாலஸ்தீன அரசை பிரான்ஸ் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அறிவித்தார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் இதனை அறிவித்துள்ளார்.

அமைதிக்கான நேரம் வந்துவிட்டது என்றும் காசாவில் நடந்த போரை நியாயப்படுத்த முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பெல்ஜியம், லக்சம்பர்க், மோல்டா, அன்டோரா மற்றும் சான் மரினோவும் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என்றும் ஜனாதிபதி மக்ரோன் உறுதிப்படுத்தினார்.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை | 23/09/2025

**கனடாவில் மொன்றியல் நகரில் போக்குவரத்து பாதிக்கும் அபாயம்**




02



# காலிஸ்தான் தீவிரவாதி இந்திரஜித் சிங் கைது

**கனடாவில் காலிஸ்தான் தீவிரவாதியான இந்திரஜித் சிங் கைது செய்யப்பட்டுள்ளார். கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்புகள் அமெரிக்காவில் 'சீக்கியர்களுக்கான நீதி' (எஸ்.எப்.ஜே) என்ற பெயரில் செயல்பட்டு வருகின்றனர்.**

இதன் கனடாவில் காலிஸ்தான் நிர்வாகியாக இந்திரஜித் சிங் கோசல் (வயது 36) செயல்பட்டு வந்தார்.

குர்பத்வந்த் சிங் பன்னுனின் வலதுகரமாக கருதப்படும் அவரை கனடா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதேவேளை கனடாவின் இந்து கோயிலில், பக்தர்கள் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில், இந்திரஜித் சிங் கோசல் கடந்த ஆண்டு நவம்பர் மாதம்கைதுசெய்யப்பட்டுபிணையில்விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள்களுடன் தண்டர் பேவில் 4 பேர் கைது

கனடாவின் தண்டர் பே பகுதியில் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 116,000 டொலர் மதிப்புள்ள சந்தேகிக்கப்படும் போதைப்பொருள்களும், 15,000 டொலர்களுக்கும் மேற்பட்ட பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த விசாரணையின் விளைவாக ஒன்டாரியோவைச் சேர்ந்த மூன்று பேரும் ஆல்பெர்டாவைச்

03






# கனடாவில் மொன்ரியல் நகரில் போக்குவரத்து பாதிக்கும் அபாயம்

கனடாவில் மொன்ரியல் நகரில் பஸ் மற்றும் மெட்ரோ சேவைகள் பாதிக்கப்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து சேவையின் பராமரிப்பு ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை முன்னெடுக்க உள்ளனர். இந்த வேலைநிறுத்தம் இரண்டு வாரங்கள் நீடிக்கக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

வேலைநிறுத்த காலத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் காலை, மாலை நெரிசல் மிக்க நேரங்களிலும் இரவு நேரத்திலும் மட்டுமே சேவைகள் இயங்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

2,400 பராமரிப்பு ஊழியர்கள் சம்பள உயர்வை கோரி போராட்டம் முன்னெடுக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நிறுவனம் அதிகமாக சப்-கான்ட்ராக்டர்களை நம்புகிறது என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

நிறுவனம் சம்பள முன்மொழிவு செய்திருந்தாலும், தொழிற்சங்கம் அதனை நிராகரித்தது, முக்கிய பிரச்சினைகளில் மாற்றம் செய்ய நிறுவனம் மறுத்துவிட்டதாக குற்றம் சாட்டியுள்ளது. தொழிற்சங்கத்தின் கோரிக்கை நிறுவனத்தின் செலவுகளை 300 மில் லியன் டொலர்கள் அதிகரிக்கும் என்பதால் நிறைவேற்ற முடியாது என போக்குவரத்து நிறுவனம் தெரி வித்துள்ளது.

இந்த வேலைநிறுத்தம் கடந்த ஜூன் மாதத்தில் நடந்த வேலைநிறுத்தத்திற்கு அடுத்ததாக நடைபெறுகிறது.

# டொரண்டோ முழுவதும் வன்முறைகள் அதிகரிப்பு

டொரண்டோ முழுவதும் இளைஞர்களிடையே வன்முறைகளில் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இளைஞர்களிடையே துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் குற்றச்செயல்களும் அதிகரித்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2025 இல் மட்டும் 12 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொலை குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளனர்.


கடந்த வாரம், டொரண்டோ நகர மையத்தில் வீதியில் தூங்கிக் கொண்டிருந்த வீடற்ற மனிதர் ஒருவர் ஆயுதம் கொண்டு தாக்கி கொல்லப்பட்ட வழக்கில் 12 வயது சிறுவனும் 20 வயது ஆணும் கைது செய்யப்பட்டனர்.




இந்த தாக்குதல்கள் அனைத்தும் தூண்டுதல் இல்லாமல் நடந்தவை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த வன்முறைகளை தடுத்து நிறுத்துவதற்கு பொலிஸார் மட்டுமன்றி ஏனைய தரப்பினரது ஒத்துழைப்பும் அவசியமானது என

03




# டிமென்ஸியா நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

கனடாவில் டிமென்ஸியா அலல்த நினைவழிவு நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆஸ்திரேலிய சுகாதார ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட புதிய அறிக்கையின்படி இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

கனடாவில் தற்போது சுமார் 7.5 லட்சம் பேர் ஆல்ஷைமர் நோயுடன் வாழ்கிறார்கள் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இது நினைவழிவு நோய்களின் முக்கிய காரணங்களில் ஒன்றாகும். 2022ஆம் ஆண்டு கனடாவில் ஆல்ஷைமர் ஒன்பதாவது பெரிய மரண காரணமாக பதிவாகியுள்ளது.

கனடா பொது சுகாதார முகமை வெளியிட்ட தரவுகளின்படி, 2022 ஏப்ரல் - 2023 மார்ச் காலகட்டத்தில் 65 வயதுக்கு மேற்பட்ட 4.87 லட்சம் பேர் நினைவழிவுடன் வாழ்ந்துள்ளனர். அதில் 99,000 பேர் புதிதாக கண்டறியப்பட்டவர்கள்.

இருப்பினும், இது ஆல்ஷைமர் தவிர்ந்த பிற நினைவழிவு நோய்களை உள்ளடக்கவில்லை என்பதால் உண்மையான எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

பல முதியவர்கள் நினைவழிவுடன் வாழ்ந்தாலும், அவர்கள் பெரும்பாலும் இதயம் நோய், ஸ்ட்ரோக், நிமோனியா போன்ற பிற நோய்களால் இறக்கிறார்கள் என பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் முதியோர் மருத்துவ நிபுணர் வைத்தியர் ரோஜர் வோங், கூறியுள்ளார்.

நினைவழிவு நோயால் ஏற்படும் விழுதல்கள், எலும்பு முறிவுகள் கூட உயிரிழப்புக்கு வழிவகுக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

கனடா ஆல்ஷைமர் சங்கத்தின் கணிப்பின்படி, 2030 இற்குள் கனடாவில் நினைவழிவு நோயாளிகள் 10 லட்சத்தை எட்டுவார்கள். தற்போது தினசரி 414 பேருக்கு இந்த நோய் கண்டறியப்படுகிறது.

2050 இற்குள் கனடாவில் மட்டும் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் நினைவழிவுடன் வாழ்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நினைவழிவை நிறுத்தவும், மந்தப்படுத்தவும் மருந்து இல்லை என டொரண்டோ பல்கலைக்கழக பேராசிரியர் ஹோவர்ட் செர்ட்கோவ் தெரிவித்தார். வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் நினைவழிவு பெருமளவில் தடுக்கப்படலாம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 18ம் திகதி பொலிஸார் பல இடங்களில் விசேட சோதனை நடத்தினர்.

முதலில், மேமோரியல் அவென்யூ பகுதியில் உள்ள ஒரு பார்க்கிங் லாட்டில் சந்தேக நபர்களில் இருவரை பொலிஸார் கண்டுபிடித்து கைது செய்தனர்.

அவர்களில் ஒருவர் தப்பிக்க முயற்சி செய்ததுடன், கையிலிருந்த செல்போனை அழிக்க முயன்றார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, கம்பர்லேண்ட் ஸ்ட்ரீட் நார்த், மாசார் அவென்யூ, விண்சோர் ஸ்ட்ரீட், கிராஸ்போ ஸ்ட்ரீட் ஆகிய இடங்களில் உள்ள வீடுகளில் பொலிஸார் சோதனை நடத்தினர். அப்போது மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சோதனையின் போது போலீசார் கோகைன், கிராக் கோகைன், பென்டனில் உள்ளிட்ட போதைப்பொருட்களையும், ரொக்கப் பணத்தையும், போதைப்பொருள் விற்பனைக்கு பயன்படுத்தப்படும் பொருட்களையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட 61 வயது ஆல்பெர்டா நபர், 49 வயது மிசிசாகா நபர், 57 வயது தண்டர் பே நபர், 45 வயது தண்டர் பே பெண் ஆகியோருக்கு போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மூன்று ஆண்களுக்கு குற்றம் மூலம் பெற்ற சொத்து வைத்திருக்கும் குற்றச்சாட்டும், பெண்மணிக்கு கூடுதலாக போதைப்பொருள் வைத்திருக்கும் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## டொரண்டோ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இளைஞர் துப்பாக்கிச் சூடுகள் தொடர்பிலான கைதுகளின் எண்ணிக்கை இரட்டிப்பானது என தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞர்கள் மீது விதிக்கப்படும் தண்டனைகள் குறைவானவை என்பதால் குற்றக் கும்பல்கள் இளைஞர்களை பயன்படுத்திக் கொள்கின்றன என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.